(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 89.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2021 ஆகஸ்ட் 05 வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ,** பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்,** கல்வி அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சீ.பீ. ரத்நாயக்க,** வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நாமல் ராஜபக்ஷ,** இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பெசில் ரோஹண ராஜபக்ஷ,** நிதி அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** போக்குவரத்து அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,** சுகாதார அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ எம். யூ. எம். அலி சப்ரி,** நீதி அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் நிவாட் கப்ரால்,** நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன,** ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேக்கர,** பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசில் பிரேமஜயந்த,** கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ நஸீர் அஹமட்**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ அகில எல்லாவல**

**கௌரவ லலித் எல்லாவல**

**கௌரவ செல்வராசா கஜேந்திரன்**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ லசஷ்மன் கிரிஎல்ல**

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ கயாஷான் நவனந்த

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்**

**கௌரவ நலின் பிரனாந்து**

**கௌரவ ஹரின் பிரனாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி**

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ றிஸாட் பதியுதீன்**

**கௌரவ சுதத் மஞ்சுல**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்**

**கௌரவ மொஹமட் முஸம்மில்**

**கௌரவ வசந்த யாப்பாபண்டார**

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க**

**கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ குமாரசிறி ரத்னாயக்க**

**கௌரவ அலி சப்ரி ரஹீம்**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ அஜித் ராஜபக்ஷ**

**கௌரவ குணதிலக ராஜபக்ஷ**

**கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ**

**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

**கௌரவ (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ**

**கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்**

**கௌரவ எம். ராமேஷ்வரன்**

**கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்**

**கௌரவ வருண லியனகே**

**கௌரவ இரான் விக்கிரமரத்ன**

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க**

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ க.வி. விக்னேஸ்வரன்**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) கல்வி அமைச்சர்,

   (i) 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை; மற்றும்

   (ii) 2019 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) கல்வி அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை மின்சார சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து இவ்வறிக்கையை மின்சக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நெடுஞ்சாலைகள் அமைச்சர்—

   (i) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 யூன் 30 ஆம் திகதிய 2234/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

   (ii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 யூன் 30 ஆம் திகதிய 2234/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

   (iii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 யூலை 02 ஆம் திகதிய 2234/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

   (iv) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 யூலை 06 ஆம் திகதிய 2235/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள் மற்றும் கட்டளை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) கல்வி அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான கம்பனி தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**2. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) மாலபே, கோணவத்த, 3 ஆம் குறுக்கு வீதி, இல. 1000/12 இல் வதியும் திரு. கே. ஹேமபாலவினது 2021.03.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட சமர்ப்பித்தார்.

(2) கொழும்பு 14, பேர்கியூசன் வீதி, இல. 95 இல் வதியும் செல்வி பீ.ஜி. கிரணி சிந்தனீ பெரேராவினது 2021.04.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**3. பெற்றோலிய வளங்கள் :** வலுசக்தி அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம், — இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபிப்பதற்காகவும்; ஆரம்பநிலை பெற்றோலியக் கைத்தொழில் மீதான தேசிய கொள்கையொன்றை உருவாக்குவதற்காகவும் இலங்கையிலுள்ள நவீன தேடிக்கண்டறிகை, அபிவிருத்தி, தயாரிப்பு மற்றும் முகாமைச் செயல்முறைகளினூடாக உள்நாட்டுப் பெற்றோலிய வளங்களின் அதிகபட்ச பொருளாதாரப் பெறுமானத்தைக் கவர்கின்ற கட்டமைப்பை ஒழுங்குபடுத்துவதற்காகவும் முகாமை செய்வதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2021 ஆகஸ்ட் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்பட வேண்டுமெனவும் பெற்றோலிய வளங்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**4. அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1):** பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் வெல்கம் ஹோட்டல்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 24 ஆம் திகதிய 2229/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.07.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

"கௌரவ கோகிலா குணவர்தன தலைமை தாங்குவாராக" என சுகாதார அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.12.19 மணிக்கு கௌரவ கோகிலா குணவர்தன தலைமை தாங்கினார்.)

(பி.ப.1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்குவாராக" என அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.28 மணிக்கு கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.18 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2):** பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் எவிக் இன்டர்நெஷனல் ஹொட்டேல்ஸ் லங்கா லிமிட்டெட் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 24 ஆம் திகதிய 2229/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.07.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3):** பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்ரல் 19 ஆம் திகதிய 2224/2 ஆம் இலக்க மற்றும் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை, அவ்வர்த்தமானப் பத்திரிகை திருத்தப்பட்டு, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ், 2021 யூலை 06 ஆம் திகதிய 2235/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. குறைநிரப்புத் தொகை:** செலவினத் தலைப்பு 441 - நிகழ்ச்சித்திட்டம் 01 மற்றும் 02,— சுகாதார அமைச்சர் சார்பாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—† 2021 சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பமாகி 2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசிற்குரிய ஏனைய எந்தவொரு நிதியத்திலிருந்தும் அல்லது பணமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம், அரசினால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற எந்தவொரு கடன் தொகையிலிருந்தும் ரூபா பதினொராயிரத்து எண்ணூற்று நாற்பத்தி மூன்று தசம் ஏழு மில்லியன் (ரூபா 11,843,700,000) ஐ மிகைக்காத மேலதிக தொகையொன்றினை அட்டவணையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் செலவிடப்படலாமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:—

**அட்டவணை**

**தலைப்பு 441** - ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**நிகழ்ச்சித்திட்டம் 01** - தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

| | | |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | ரூ. | 115,700,000 |
| மூலதனச் செலவினம் | ரூ. | 19,000,000 |

| | | | |
|---|---|---|---|
| **நிகழ்ச்சித்திட்டம் 02** | **-** அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | |
| | மீண்டெழும் செலவினம் | ரூ. | 11,455,000,000 |
| | மூலதனச் செலவினம் | ரூ. | 254,000,000 |
| | | | |
| | மீண்டெழும் செலவினம் | ரூ. | 11,570,700,000 |
| | மூலதனச் செலவினம் | ரூ. | 273,000,000 |
| | **மொத்தச் செலவினம்** | **ரூ.** | **11,843,700,000** |

(ரூபா பதினொராயிரத்து எண்ணூற்று நாற்பத்தி மூன்று தசம் ஏழு மில்லியன்)

† 2021 யூலை 19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டைப் பார்க்க.

1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 200,000,000,000 ஆகும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு (நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள்) :** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என நெடுஞ்சாலைகள் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

“கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமை தாங்குவாராக” என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.14 மணிக்கு கௌரவ வீரசுமன வீரசிங்க தலைமை தாங்கினார்.)

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, இன்றைய சபைத் தீர்மானத்திற்கிணங்க பி.ப. 5.35 மணிக்கு தலைமை தாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2021 ஆகஸ்ட் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.